தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்

# செய்தி மடல்

செய்தி 14 மடல் 10 அக்டோபர் – 2014 ₹1.00

## இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் சிறப்பாய்வுக் குழு வருகை



இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் அங்கீகாரம் பெறுவதற்கெனத் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் சமர்ப்பித்துள்ள தன்னாய்வு அறிக்கையினை மதிப்பீடு செய்யவும், நேரடி மதிப்பீட்டாய்வு மேற்கொள்ளும் பொருட்டும், இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தினால் நியமிக்கப்பட்ட டாக்டர் ஏ.டி. ஷெரீக்கர், தலைவர்; டாக்டர் எஸ்.கே.ராய், உறுப்பினர்; டாக்டர் கே.என்.அரவிந்த் கோஷ், உறுப்பினர் மற்றும் டாக்டர் ஜி.வெங்கடேஷ்வர்லு, உறுப்பினர்–செயலர் மற்றும் உதவித் தலைமை இயக்குநர், இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகம் ஆகியோர் அடங்கிய சிறப்பாய்வுக் குழுவினர் 17–19 செப்டம்பர், 2014 தேதிகளில் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் மற்றும் அதன் உறுப்புக் கல்லூரிகளுக்கு வருகை புரிந்தனர். இந்தச் சிறப்பாய்வுக் குழுவினர் 17.09.2014 அன்று சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியினைப் பார்வையிட்டனர். பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சி இயக்குநர் முனைவர் கா. குமணன் அவர்கள் பல்கலைக்கழகத்தின் நடவடிக்கைகள் பற்றி விளக்கிக் கூறினார். இக்குழுவினர், பல்கலைக்கழகத்தின் தலைமை வளாகம், அங்குள்ள இதர பிரிவுகள் மற்றும் கோடுவெளியில் உள்ள உணவு மற்றும் பால்வளத் தொழில்நுட்பக் கல்லூரி ஆகியவற்றினை 18.09.2014 அன்று பார்வையிட்டனர். மேலும், காட்டுப்பாக்கத்தில் உள்ள கால்நடை அறிவியல் முதுநிலை ஆராய்ச்சி நிலையத்தை 19.09.2014 அன்று பார்வையிட்டனர். பல்கலைக்கழகத் துணைவேந்தர் (பொ.) மற்றும் பதிவாளர் முனைவர் தி.ஜெ. ஹரிகிருஷ்ணன் அவர்கள் சிறப்பாய்வுக் குழுவினக்கு, பல்கலைக்கழகத்தின் கல்வி, ஆராய்ச்சி, விரிவாக்கப் பணிகள் மற்றும் உள்கட்டமைப்பு வசதிகள் குறித்து விளக்கினார்.

## நாட்டுக்கோழி குறித்த தேசியக் கருத்தரங்கு

பல்கலைக்கழக வெள்ளி விழா ஆண்டினை(2014) முன்னிட்டு மாதவரம், கோழியின ஆராய்ச்சி நிலையம் மற்றும்




புதுக்கோட்டை, பல்கலைக்கழக மண்டல ஆராய்ச்சி மையம்மூலம் “நாட்டுக்கோழி வளர்ப்பு: சவால்களும் வாய்ப்புகளும்” இரு நாள் தேசியக் கருத்தரங்கு, சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில் 04.09.2014 மற்றும் 05.09.2014ஆம் தேதிகளில் நடத்தப்பட்டது. இக்கருத்தரங்கில் நாட்டுக்கோழி இனங்களின் பாதுகாப்பு, நாட்டுக்கோழி வளர்ப்பில் ஊட்டச்சத்தின் தேவைகள், தீவனமளித்தல் முறைகள், பராமரிப்பு முறைகள், நோய்க் கட்டுப்படுத்தல் வழிமுறைகள் ஆகியவை பரிந்துரைக்கப்பட்டன. 04.09.2014அன்று நடைபெற்ற கருத்தரங்கின் துவக்க விழாவில் தமிழ்நாடு அரசின் கால்நடைப் பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறைச் செயலர் முனைவர் எஸ். விஜயகுமார் இ.ஆ.ப., அவர்கள் கருத்தரங்கைத் துவக்கிவைத்துக் கருத்தரங்க மலர் வெளியிட்டுத் துவக்கவுரை ஆற்றினார். அவர் தமது உரையில் ஏழை எளிய மக்களின் வறுமையைப் போக்குவதற்கும், அவர்களின் வாழ்க்கைத் தரம் உயர்வதற்கும் தமிழ்நாடு அரசு உருவாக்கியுள்ள கோழியின மேம்பாட்டுத் திட்டத்தின் முக்கியத்துவம் பற்றி எடுத்துரைத்தார். பல்கலைக்கழகத் துணைவேந்தர் (பொ.) முனைவர் தி.ஜெ. ஹரிகிருஷ்ணன் அவர்கள் தமது தலைமையுரையில் பயன்படுத்துவதற்கு எளிதாகவும் வாங்குவதற்கு ஏற்ற விலையிலும் பல்கலைக்கழகம் உருவாக்கியுள்ள நந்தனம் கோழி 1, 2, 3 மற்றும் 4, நாமக்கல் கோழி 1, கோழி காலரா நோய்க்கு வாய்வழி அளிக்கும் தடுப்பு மருந்து ஆகியவை குறித்து விளக்கிப்பேசினார். ஓசூர், கோழியின உற்பத்தி மற்றும் மேலாண்மைக் கல்லூரியின் இயக்குநர் முனைவர் எம். முருகன், சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரி முதல்வர் முனைவர் ச.அ. அசோகன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். முன்னதாக, கருத்தரங்க அமைப்புக்குழுத் தலைவர் மற்றும் பல்கலைக்கழகக் கால்நடை உற்பத்திக் கல்வி மைய இயக்குநர் முனைவர் ம. பாபு அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். மொத்தம் 145 அறிவியலாளர்கள் மற்றும் 49 பண்ணையாளர்கள் கருத்தரங்கில் பங்கேற்றனர். பல்வேறு நாட்டுக்கோழி இனங்கள் உட்பட வெவ்வேறு தொழில்நுட்பங்கள் பார்வைக்கு இடம்பெற்ற கண்காட்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. பல்கலைக்கழகத் துணைவேந்தர் (பொ.) முனைவர் தி.ஜெ. ஹரிகிருஷ்ணன் அவர்கள் சிறந்த வாய்மொழி மற்றும் சுவரிதழ் சமர்ப்பித்தல்

விருதுகள் மற்றும் பங்கேற்பாளர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்கி, நிறைவுரை ஆற்றினார். பல்கலைக்கழகத் தொலைநிலைக் கல்வி இயக்குநர் முனைவர் தே. தியாகராஜன் அவர்கள் தமது வாழ்த்துரையில் வான்கோழி, ஜப்பானியக் காடை மற்றும் நாட்டுக்கோழிகளுக்கெனத் தனியே ஆராய்ச்சி நிலையம் தேவை என்று வலியுறுத்தினார். விரிவாக்கக்கல்வி இயக்குநர் முனைவர் சி. சந்திரகாசன் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார்.

## புரிந்துணர்வு ஒப்பந்தம்



பல்கலைக்கழகத்தொலைநிலைக்கல்விஇயக்ககம்மூலம் மனநோய் குணமடைந்தோர்க்குச் சிறப்புச் செயல்திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளிப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம், சென்னை மஹிந்த்ரா கன்சல்ட்டிங் இன்ஜினியர்ஸ் லிமிடெட் மற்றும் எம்.எஸ். செல்லமுத்து அறக்கட்டளை மற்றும் ஆராய்ச்சி மையம் ஆகியவற்றுக்கிடையே 12.09.2014அன்று செய்துகொள்ளப்பட்டது. பல்கலைக்கழகத் துணைவேந்தர் (பொ.) முனைவர் தி.ஜெ. ஹரிகிருஷ்ணன், சென்னை மஹிந்த்ரா கன்சல்ட்டிங் இன்ஜினியர்ஸ் லிமிடெட்டின் முதன்மைச் செயல் அலுலுவர் திரு. சி.எஸ். நாராயணன், எம்.எஸ். செல்லமுத்து அறக்கட்டளை மற்றும் ஆராய்ச்சி மையத்தின் திட்ட இயக்குநர் திரு. கே.எஸ்.பி. ஜனார்தன் பாபு ஆகியோர் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையொப்பம் இட்டனர். இந்நிகழ்ச்சியில் பல்கலைக்கழகத் தொலைநிலைக் கல்வி இயக்குநர் முனைவர் தே. தியாகராஜன், எம்.எஸ். செல்லமுத்து அறக்கட்டளை மற்றும் ஆராய்ச்சி மையத்தின் மன நலத் திட்டத்தின் மாநில ஒருங்கிணைப்பு அலுவலர் டாக்டர் சி. ராமசுப்ரமணியன் ஆகியோர் உடனிருந்தனர்.

## ஆய்வக விலங்கின அறிவியல் பற்றிய சான்றிதழ்ப் பயிற்சி 2014

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் விலங்குகளில் மேற்கொள்ளப்படும் ஆராய்ச்சிகளைக் கட்டுப்படுத்துதல் மற்றும் மேற்பார்வையிடும் குழு, தேசிய விலங்கின நல வாழ்வு நிலையம் மற்றும் ஆய்வக விலங்கின அறிவியலாளர்கள் அமைப்பு ஆகியவற்றுடன் இணைந்து, ஆய்வக விலங்குகள் அறிவியல் துறையிலுள்ள தேவைகளை ஈடுசெய்யும் பொருட்டு ஆய்வக விலங்குகள் அறிவியலில் சான்றிதழ்ப் பயிற்சியை நடத்தின. இச்சான்றிதழ்ப் படிப்பானது ஐரோப்பிய ஆய்வக விலங்கின அறிவியல் கூட்டமைப்பில் பதிவுபெற்ற சான்றிதழ்க்கான தகுதிகளைப் பெற்றது. பயிற்சியானது இரண்டாவது முறையாக கால்நடை நலக்கல்வி மையத்தின் கீழ் இயங்கிவரும் ஆய்வக விலங்கின மருத்துவப் பிரிவால், சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில் 01.09.2014முதல் 11.09.2014வரை நடத்தப்பட்டது. பயிற்சியில் பல்கலைக்கழக ஆசிரியர்கள், மத்திய, மாநிலஅரசு மற்றும் ஆய்வக விலங்கின துறையில் பணிபுரியும் மொத்தம் 29 பேர் பங்கேற்றனர். விலங்குகளில் மேற்கொள்ளப்படும் ஆராய்ச்சிகளைக் கட்டுப்படுத்துதல் மற்றும் மேற்பார்வையிடும் குழுவின் உறுப்பினர் செயலர் மற்றும் மத்திய அரசின் சுற்றுச்சூழல் மற்றும் வனப் பாதுகாப்பு அமைச்சகத்தின் இணைச் செயலர் செல்வி கீதாஞ்சலி அவர்கள் 01.09.2014 அன்று பயிற்சியைத் துவக்கிவைத்தார். 11.09.2014 அன்று நடைபெற்ற பயிற்சியின் நிறைவு விழாவில் பல்கலைக்கழகக் கால்நடை நலக் கல்வி மைய இயக்குநர்(பொ.) முனைவர் கா. குமணன், அவர்கள் வரவேற்புரை வழங்கினார். திட்ட அலுவலர் முனைவர் ச. பாலச்சந்திரன் அவர்கள் பயிற்சி அறிக்கை வழங்கினார். பார்சிலோனா தன்னாட்சிப் பல்கலைக்கழகத்தின் பயிற்சி ஒருங்கிணைப்பாளர் முனைவர் பத்ரி வர்கரா, சுற்றுச்சூழல் மற்றும் வனபாதுகாப்பு அமைச்சகத்தின் பயிற்சி உதவிச் செயலர் செல்வி பிரேமா மோகன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். பல்கலைக்கழகத் துணைவேந்தர் (பொ.) முனைவர் தி.ஜெ. ஹரிகிருஷ்ணன் அவர்கள் பயிற்சியாளர்களுக்குச் சான்றிதழ் வழங்கித் தலைமை உரை ஆற்றினார்.

### கல்வி நிலையப் பணி

### சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரி

### உலக வெறிநோய் தினம் –2014




கல்லூரியின் கால்நடைப் பொதுச் சுகாதாரம் மற்றும் நோய் நிகழ்வாய்வியல் துறைமூலம் “வெறிநோய் கண்டறிதல்” குறித்த ஒரு நாள் பயிலரங்கிற்கு ஏற்பாடு செய்யப்பட்ட, உலக வெறிநோய் தினம் 26.09.2014அன்று கடைப்பிடிக்கப்பட்டது. அரசு ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையின் முதல்வர் டாக்டர் ஏ.எல். மீனாட்சி சுந்தரம் அவர்கள் பயிலரங்கைத் துவக்கிவைத்து, கால்நடைப் பொதுச் சுகாதாரம் மற்றும் நோய் நிகழ்வாய்வியல் துறைப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் எல். குணசீலன் அவர்கள் உருவாக்கிய “வெறிநோய் ஒரு கண்ணோட்டம்” குறித்த டிவிடி வெளியிட்டார். பயிலரங்கிற்குப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் (பொ.) முனைவர் தி.ஜெ. ஹரிகிருஷ்ணன் அவர்கள் தலைமை வகித்தார். கல்லூரி முதல்வர் முனைவர் ச.அ. அசோகன், சிகிச்சையியல் இயக்குநர் முனைவர் சொ.ரா. சீனிவாசன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். இதில் 7 மருத்துவர்கள் மற்றும் 17 கால்நடை மருத்துவர்கள் உட்பட மொத்தம் 25 பேர் பயிலரங்கில் பங்கேற்றனர்.

### தேசியப் பயிலரங்கு

கல்லூரியிலுள்ள உயிர்நுட்பத் தகவல் மையம் “மருந்து வடிவமைத்தலில் உயிர்நுட்பத் தகவலியலின் பயன்பாடுகள்” என்ற தேசியளவிலான பயிலரங்கினை 24.09.2014முதல் 26.09.2014வரை நடத்தியது. கல்லூரி முதல்வர் முனைவர் ச.அ. அசோகன் அவர்கள் பயிலரங்கினைத் துவக்கிவைத்தார். மேலும், 26.09.2014அன்று நடைபெற்ற பயிலரங்கின் நிறைவு விழாவில் 12 பங்கேற்பாளர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்கினார்.

### சிறப்பு விரிவுரை

கல்லூரியின் கால்நடைப் பராமரிப்புப் பொருளியல் மற்றும் கால்நடை வணிக மேலாண்மைத் துறைகள்மூலம் சிறப்பு விரிவுரை கல்லூரியின் இளநிலை இறுதியாண்டு மாணவர்கள் பயன்பெறும் நோக்கில் ஏற்பாடு செய்யப்பட்டது. கோயம்புத்தூர், விர்பாக் அனிமல் ஹெல்த் இந்தியா பிரைவேட் நிறுவனத்தின் மண்டல விற்பனை மேலாளர் மற்றும் கல்லூரியின் முன்னாள் மாணவர் டாக்டர் பி. இளங்கோ அவர்கள் “விற்பனைத் துறையில் வாய்ப்புகள் – வளமான எதிர்காலத்திற்கு ஆலோசனைகள்” என்ற பொருளில் சிறப்பு விரிவுரை ஆற்றினார்.

## நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்

### விவசாயிகள்–விஞ்ஞானிகள் கலந்துரையாடல் கூட்டம்



கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் நவீன முறையில் வெள்ளாடு வளர்ப்பு பற்றிய விவசாயிகள்–விஞ்ஞானிகள் கலந்துரையாடல் கூட்டம் 10.09.2014 அன்று நடத்தப்பட்டது. கலந்துரையாடலில் நாமக்கல், கரூர், ஈரோடு, கோயம்புத்தூர், திண்டுக்கல், சேலம், திருப்பூர் மாவட்டங்களிலிருந்து சுமார் 100 விவசாயிகள் கலந்து கொண்டனர். கல்லூரி முதல்வர் முனைவர் கொ.ஆ. துரைசாமி அவர்கள் கலந்துரையாடலில் பங்குபெற்றவர்களுக்குச் சான்றிதழ் வழங்கி சிறப்புரை ஆற்றினார்.

## திருநெல்வேலி, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்

### பள்ளிகளுக்கு இடையேயான போட்டி – 2014

திருநெல்வேலி, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் பள்ளி மாணவர்களை ஊக்கப்படுத்தும் வகையில் “கால்நடை மருத்துவ அறிவியலில் நவீன மேம்பாடுகள் மற்றும் மனித ஊட்டச்சத்தில் கால்நடைப் புரதச்சத்தின் முக்கியத்துவம்” என்ற தலைப்பில் பத்மஸ்ரீ டாக்டர் பி.வி. ராவ் பெயரில் பள்ளிகளுக்கு இடையேயான போட்டி – 2014ஐ




04.09.2014முதல் 06.09.2014வரை நடத்தியது. திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களைச் சார்ந்த மொத்தம் 651 மாணவர்கள் கட்டுரைப் போட்டி, பேச்சுப்போட்டி, வண்ணம் தீட்டுதலிலும் 43 குழுவினர் வினாடி–வினாப் போட்டியிலும் பங்கேற்றனர். பல்கலைக்கழகத் துணைவேந்தர்(பொ.) முனைவர் தி.ஜெ. ஹரிகிருஷ்ணன் அவர்கள் 06.09.2014அன்று நடைபெற்ற பரிசளிப்பு நிகழ்ச்சியில் பங்கேற்றுப் போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்குப் பரிசுகள் வழங்கிச் சிறப்புரை ஆற்றினார். கல்லூரி முதல்வர் முனைவர் சே. பிரதாபன் அவர்கள் நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்தார். வெங்கடேஸ்வரா ஹேட்சரிஸ் பிரைவேட் நிறுவனத்தின் இணைத் தலைமை மேலாளர் டாக்டர் சி.ஆர். செல்வகுமார் அவர்கள் சிறப்புரை ஆற்றினார். பல்கலைக்கழகத் தேர்வாணையர் முனைவர் எம். திருநாவுக்கரசு அவர்கள் வாழ்த்துரை வழங்கினார்.

### கால்நடை நல முகாம்

திருநெல்வேலி, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் மதுரை, கோவன்ட் வளர்ச்சி மையம் மற்றும் திருநெல்வேலி, சுஜ்லோன் பவுண்டேஷன் ஆகியவற்றுடன் இணைந்து “கால்நடை நல முகாமை” 25.09.2014 அன்று நடத்தியது. கல்லூரி முதல்வர் முனைவர் சே. பிரதாபன் அவர்கள் முகாமைத் துவக்கிவைத்துத் தலைமையுரை ஆற்றினார்.

## ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்

### கோமாரி நோய்த் தடுப்பூசி முகாம்



ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையமும், தமிழ்நாடு அரசு கால்நடைப் பராமரிப்பு துறையும் இணைந்து 03.09.2014 முதல் 21.09.2014 வரை பல்வேறு

Posted on 23.10.2014 at Pathrika channel, EGMORE, RMS
Date of publication : 21.10.2014

Licensed to post without prepayment No.TN/PMG/(CCR)/WPP-708/12-14
Registration No.TN/TBM/32/2012-14

Registered with Registrar of Newspapers for India No.TN TAM/2001/5254
Posted at Pathrika Channel, Egmore RMS, Chennai - 8.
Printed and Published by
Dr. D. Thyagarajan, Ph.D., Director of Distance Education
on behalf of Tamil Nadu Veterinary and Animal Sciences University
and Printed at University Publication Division, Madhavaram Milk Colony,
Mathur Road, Ambathur Taluk, Tiruvallur District, Chennai - 600 051
**Editor : Dr. D. Thyagarajan,** M.V.Sc., Ph.D., **Phone : 044-2555 4411**
**E-mail : dde@tanuvas.org.in**

வகையான சிறப்பு கோமாரி நோய்த் தடுப்பூசி முகாமை நடத்தின. ஒரத்தநாட்டைச் சுற்றியுள்ள 10 கிராமங்களான தென்னமநாடு, புலவன்காடு, தெலுங்கன்குடிகாடு, உறந்தராயன்குடிகாடு, கண்ணந்தன்குடி மேலையூர், கண்ணந்தன்குடி கீழையூர், கக்கரை, புதூர், பாலம்புதூர் மற்றும் ஒரத்தநாடு நகரியத்தில் உள்ள 2619 கறவைப் பசு, எருமை, மற்றும் கன்றுகளுக்குக் கோமாரி நோய்த் தடுப்பூசி போடப்பட்டது.

## விரிவாக்கப் பணி

### செயல்திறன் மேம்பாடு மற்றும் சுய வேலைவாய்ப்புப் பயிற்சிகள்

பல்கலைக்கழகத்தின் தொலைநிலைக் கல்வி இயக்ககத்தின்மூலம் வெள்ளாடு வளர்ப்பு, கறவைமாடு வளர்ப்பு, நாட்டுக்கோழி வளர்ப்பு, ஜப்பானியக் காடை வளர்ப்பு, செம்மறியாடு வளர்ப்பு, வெண்பன்றி வளர்ப்பு, முயல் வளர்ப்பு, பசுந்தீவனம் மற்றும் பசுந்தீவன விதை உற்பத்தி, பால்பண்ணை உதவியாளர், தீவன ஆலை மேற்பார்வையாளர் ஆகிய செயல்திறன் மேம்பாடு மற்றும் சுய வேலைவாய்ப்புப் பயிற்சிகள் ஒருங்கிணைக்கப்பட்டு கடலூர், மேல்மருவத்தூர், நாகர்கோவில் மற்றும் திருவண்ணாமலை கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிலையங்கள்; நாமக்கல் மற்றும் திருநெல்வேலி கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையங்கள், காட்டுப்பாக்கம், கால்நடை அறிவியல் முதுநிலை ஆராய்ச்சி நிலையம், மாதவரம் பல்கலைக்கழக ஆராய்ச்சிப் பண்ணை மற்றும் கோழியின ஆராய்ச்சி நிலையம் ஆகியவற்றில் செப்டம்பர் 2014இல் நடத்தப்பட்டன. பயிற்சிகளில் 25பேர் பதிவுசெய்து பயிற்சியை நிறைவுசெய்தனர்.

### மகாசபைக் கூட்டம்

சேலம், கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம்மூலம் "மகாசபைக் கூட்டம்", நபார்டு நிதியுதவியின்கீழ் ஏற்படுத்தப்பட்ட ஒன்பது நாட்டுக்கோழி வளர்ப்புக் குழுவினருக்காக 15.09.2014அன்று நடத்தப்பட்டது. மாரமங்கலம், அரங்கம், பெல்லக்காடு, வி.புதூர், கீரைக்காடு, மோட்டுக்காடு மற்றும் வாழவந்தி ஆகிய மலைவாழ் மக்கள் குடியிருப்புகளைச் சார்ந்த மொத்தம் 74 பேர் கூட்டத்தில் பங்கேற்றனர்.

### சுய வேலைவாய்ப்புப் பயிற்சி

கரூர், கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம், இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் ஊரகத் தொழில் முனைவோர் பயிற்சி மையத்தின் நிதியுதவியுடன் "இலாபகரமான கறவை மாடு வளர்ப்பும் பண்ணைக் கழிவுகளின் மறுசுழற்சியும்" மற்றும் "வெள்ளாடு வளர்ப்பும் மேய்ச்சல் தரைப் பராமரிப்பும்" ஆகிய இரு சுய வேலைவாய்ப்புப் பயிற்சிகளை முறையே 04.09.2014 – 10.09.2014 மற்றும் 22.09.2014 – 27.09.2014 தேதிகளில் நடத்தியது. பயிற்சிகளில் கரூர் மாவட்டத்தைச் சேர்ந்த 25 பெண்கள் உட்பட மொத்தம் 58 பண்ணையாளர்கள் பங்கேற்றுப் பயன்பெற்றனர்.

### ஒருங்கிணைந்த பண்ணையப் பயிற்சி

காஞ்சிபுரம், உழவர் பயிற்சி மையம்மூலம் ஒருங்கிணைந்த பண்ணையம் குறித்த ஒரு நாள் பயிற்சி, 100 பயனாளிகளுக்கு 22.09.2014அன்று காஞ்சிபுரம் மாவட்டத்தின் பஞ்சுபேட்டையில் அளிக்கப்பட்டது. மேலும், காஞ்சிபுரம் மாவட்டத்தின் 25 முன்னோடிப் பண்ணையாளர்களுக்கு "பசுந்தீவன உற்பத்தியும் கறவை மாடுகளுக்குத் தீவனமளித்தலும்" குறித்த ஒரு நாள் பயிற்சி அளிக்கப்பட்டது.

## பரிசு



சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியின் இளநிலை இறுதியாண்டு மாணவி செல்வி ஆர். செல்வராணி அவர்கள் சென்னை, ஜவஹர்லால் நேரு உள்விளையாட்டு அரங்கில் 15.09.2014முதல் 20.09.2014வரை நடத்தப்பட்ட பல்கலைக்கழகங்களுக்கு இடையேயான விளையாட்டுப் போட்டியில் பெண்களுக்கான உயரம் தாண்டுதலில் வெண்கலப்பதக்கமும், பரிசுத் தொகை ரூபாய் 5000/–மும் பெற்றார். மாண்புமிகு தமிழக இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ். சுந்தரராஜ் அவர்கள் மாணவிக்கு வெண்கலப் பதக்கம் மற்றும் பரிசுத் தொகையை வழங்கினார். தமிழ்நாடு அரசின் விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் முதன்மைச் செயலர் / உறுப்பினர் செயலர் திரு. வி.கே. ஜெயக்கொடி, இ.ஆ.ப. அவர்கள் உடனிருந்தார்.